




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வியாழன் ❖ ஜூலை. 06, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 272 ❖ ரூ.10


"என்னை வில்லன் போல் சித்தரிப்பது அநீதி" ஆதரவாளர்களுடன் 'மாஸ்' காட்டிய

# அஜித் பவார்

## நாங்கள் மக்கள் நலனுக்காக அரசியல் செய்ய விரும்புகிறோம்: சரத் பவார்

**மும்பை, ஜூலை. 6–**

**தேசியவாத காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்படுத்திவிட்டதாக தன்னை சிலர் வில்லன் போல் சித்தரித்தால், அது அநீதி என்று மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார் தெரிவித்துள்ளார்.**

தேசியவாத காங்கிரஸ் கட்சி (என்சிபி) தலைவர் சரத் பவாரின் அண்ணன் மகன் அஜித் பவார், கடந்த ஜூலை 2 மதியம் தனது ஆதரவு எம்எல்ஏக்களுடன் ஆளும் பாஜக - சிவசேனா கூட்டணியில் இணைந்து துணை முதல்வரானார். மேலும், தாங்களே உண்மையான தேசிவாத காங்கிரஸ் எனவும் அவர் உரிமை கோரி வருகிறார். இது மகாராஷ்டிரா அரசியில் பெரும் பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசியல் மாற்றங்களை சிவசேனா (உத்தவ் பால் தாக்கரே) பிரிவுத் தலைவர் உத்தவ் தாக்கரே, ஆளும் கூட்டணியில் உள்ள பாஜக, சிவசேனா (ஷிண்டே பிரிவு) என அனைத்துத் தரப்பும் உற்று நோக்கி வருகிறது.

இந்த நிலையில், கட்சியின் எம்எல்ஏக்களில் யாருக்கு அதிக ஆதரவு இருக்கிறது என்பதை நிரூபிக்க பவார் vs பவார் அணிகள் மும்பையில் நேற்று தனித்தனியாக கூடின. அஜித் பவார் தலைமையில் நடந்த கூட்டத்தில் அவர் பேசிய சில விஷயங்கள் தற்போது வெளியாகி விவாதப் பொருளாக மாறியுள்ளன.

"தேசியவாத காங்கிரஸ் கட்சிக்குள் என்னை சிலர் வில்லன் போலவும் சரத் பவாரை கடவுள் போலவும் சித்தரித்தனர். இது எனக்கு எதிரான அநீதி. நாம் இன்னாருக்குத் தான் பிறக்க வேண்டும் என்று நாம் தீர்மானிக்க முடியாது. அதில் என் தவறு ஏதும் இல்லை.

தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் நிச்சயமாக மகாராஷ்டிரா முதல்வராகி இருக்க முடியும். சரத்பவார் மட்டும் நான் சொன்னதைக் கேட்டிருந்தால் அது என்றோ நடந்திருக்கும். 2004 சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னால் என்சிபி கட்சிக்கு காங்கிரஸை விட அதிக பலம் இருந்தது. ஆனால், எம்எல்ஏக்கள் பலம் இருந்தும் காங்கிரஸுக்கு முதல்வர் பதவி விட்டுக் கொடுக்கப்பட்டது. 2017-ல் முதல்வரின் ஆதிகாரபூர்வ இல்லத்தில் ஒரு முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அதில் பாஜக தலைவர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

அமைச்சரவைப் பதவிகள் பற்றி ஆலோசனை நீண்டது. ஆனால், கட்சித் தலைமை அதிலிருந்து பின்வாங்கியது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவேண்டும்என்றுஎம். எல்.ஏக்கள் அனைவரும் கடிதம் எழுதினர். கட்சித் தலைமைக்கு அவர்கள் எழுதிய கடிதத்தின் புகைப்படங்கள் என்னிடம் உள்ளது. ஆனால், ஏன் கட்சித் தலைவர் சரத் பவார் பிடிவாதம் காட்டினார் என்று எங்களுக்குப் புரியவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் வேலையில் ஈடுபடுகிறார். அண்மையில்பாட்னாவில் எதிர்க்கட்சியினர் கூடினர். அனைவரும் மதிய விருந்து அருந்திவிட்டு திரும்பிச் சென்றனர். 2024 மக்களவைத் தேர்தலுக்குப் பின்னரும் மோடிதான் பிரதமராகப் போகிறார்.

அரசியலில் பலரும் 75 வயதில் ஓய்வு பெற்று விடுகின்றனர். ஆனால், 83 வயதாகியும் ஏன் சரத் பவார் ஓய்வை விரும்பவில்லை. இளைய தலைமுறையினருக்கு வழிவிடுங்கள். நாங்கள் சொல்வது சரியென்றால் ஊக்குவிக்கவும். தவறென்றால் வழிநடத்தவும். நீங்கள் ராஜினாமா செய்துவிட்டு உங்கள் முடிவுகளை சுயமாக எடுங்கள். அதைவிடுத்து தேசியவாத காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்படுத்திவிட்டதாக தன்னை சிலர் வில்லன் போல் சித்தரித்தால், அது அநீதி.

நான் ஐந்து முறை துணை முதல்வராக இருந்துவிட்டேன். எனக்கும் முதல்வராக வேண்டும்என்றுவிருப்பம் இருக்கிறது. மகாராஷ்டிரா மக்களுக்காக நல்ல பல திட்டங்களை வகுக்க வேண்டும்என்றவிருப்பம் உள்ளது" என்று அஜித் பவார் பேசினார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சி எம்எல்ஏக்கள் 53 பேரில் 31 பேர் அஜித் பவாருக்கு ஆதரவாக இருப்பதாகத் தெரிகிறது. இந்நிலையில், அஜித் பவார் தேர்தல் ஆணைய அலுவலகத்துக்குச் சென்று தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சின்னத்துக்கு உரிமை கோரவிருக்கிறார்.



### அதிகாரப் பசி இல்லை

மறுபக்கம் தனது தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், "எங்களுக்கு ஒருபோதும் அதிகாரப் பசி இல்லை. நாங்கள் மக்கள் நலனுக்காக அரசியல் செய்ய விரும்புகிறோம்" என்று சரத் பவார் கூறியுள்ளார். மேலும் கட்சியும், சின்னமும் தன் பக்கமே இருப்பதாகவும் சரத் பவார் கூறியுள்ளார்.

### சுப்ரியா சூலே பதிலடி

சரத் பவாரின் வயதைக் குறிப்பிட்டுப் பேசிய அஜித் பவாருக்கு சுப்ரியா சூலே பதிலடி கொடுத்துள்ளார். இது தொடர்பாக அவர், "சிலர் வயது மூப்பு, ஓய்வு பற்றிப் பேசுகின்றனர். அமிதாப் பச்சன், ரத்தன் டாடா, வாரன் புஃபட் ஆகியோருக்கும் தான் வயதாகிறது. ஃபரூக் அப்துல்லா சரத் பவாரைவிட 3 வயது மூத்தவர். அதனால் சரத் பவார் தொடர்ந்து அரசியலில் இயங்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.



▶ நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தலைமைச் செயலகத்தில், மாநில அளவிலான வங்கியாளர் குழு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / முதலமைச்சரின் செயலாளர்– I நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் நிர்வாக இயக்குநர் / முதன்மை அலுவலர் அஜய் குமார் ஸ்ரீவத்சவா, இந்திய ரிசர்வ் வங்கியின் மண்டல இயக்குநர் உமா சங்கர், நபார்டு தலைமை பொது மேலாளர் சங்கர் நாராயண், துறைச் செயலாளர்கள், காணொலி காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சியர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் வங்கிகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழகத்துக்கான காவிரி நீரை

## கர்நாடகம் உடனே வழங்க வலியுறுத்துக மத்திய அமைச்சரிடம் துரைமுருகன் கோரிக்கை

**சென்னை , ஜூலை. 6–**

காவிரியில் இருந்து தமிழகத்துக்கான தண்ணீரை உடனடியாக வழங்க கர்நாடக அரசை வலியுறுத்த வேண்டும் என்று மத்திய நீர்வளத் துறைஅமைச்சர்கஜேந்திர சிங் ஷெகாவத்தை சந்தித்து நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் கோரிக்கை விடுத்தார்.

காவிரியில் இருந்து தமிழகத்துக்கு வழங்க வேண்டிய தண்ணீரை உடனடியாக வழங்க வேண்டி டெல்லியில் நேற்று மத்திய நீர்வளத் துறைஅமைச்சர்கஜேந்திர சிங் ஷெகாவத்திடம் அமைச்சர் துரைமுருகன் நேரில் சந்தித்து வலியுறுத்தினார். மேலும், மேகேதாட்டு அணையினை கட்டக் கூடாதுஎன்றுவலியுறுத்தி கோரிக்கை மனுவினை அவர் வழங்கினார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: "ஜூன் மற்றும் ஜூலை 3ம் தேதி வரை 12.213 டி.எம்.சி அடி தண்ணீர் தமிழகத்துக்கு கிடைத்திருக்கவேண்டும். ஆனால், இதுவரை 2.993 டி.எம்.சி அடி தண்ணீர் தான் வரப்பெற்றுள்ளது. 9.220 டி.எம்.சி அடி தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.இதனால், காவிரிடெல்டாபகுதியில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் எல்லாம் உலர்ந்துபோய்விடும்.

ஆகையினால், உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி,கர்நாடக அரசு, தமிழகத்துக்கு வழங்க வேண்டிய உரிய பங்கீட்டு நீரினை உடனடியாகவழங்குவதை உறுதி செய்வது காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் பொறுப்பாகும். எனவே, மத்திய அரசின் நீர்வளத் துறை அமைச்சர், தமிழகத்துக்கு அளிக்க வேண்டிய உரிய பங்கீட்டு நீரினை கர்நாடக அரசு உடனடியாக விடுவிக்க காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சர், மத்திய அரசின் இணைச் செயலாளரை அழைத்து இது தொடர்பாக காவிரி நீர் மேலாண்மை ஆணையத்துடன் கலந்தாலோசித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்" என்று கூறப்பட்டுள்ளது.





▶ காவிரி, வைகை, குண்டாறு கால்வாய் திட்ட பணியை தொய்வின்றி விரைவு படுத்த வேண்டும் என வலியுறுத்தி புதுக்கோட்டை மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் புதுக்கோட்டையில் நேற்று உழவர் தின பேரணி மற்றும் கோரிக்கை மாநாடு நடைபெற்றது. இதில் தமிழகத்திலிருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் கலந்து கொண்டு தங்களுடைய கோரிக்கையை அரசுக்கு எடுத்துரைத்தனர்.

## கஞ்சா வழக்குகளில் பறிமுதல் வாகனங்களை விசாரணை முடியும் வரை வைத்திருக்க தேவையில்லை: உயர் நீதிமன்றம்

**மதுரை , ஜூலை. 6–**

கஞ்சா வழக்குகளில் பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை விசாரணை முடியும் வரை வைத்திருக்க தேவையில்லை என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த நாகூர்கனி, உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: 'என் மீது 2018-ல் கஞ்சா கடத்தல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. எனக்கு சொந்தமான ஜீப்பை போலீஸார் பறிமுதல் செய்தனர். ஜீப்பை என்னிடம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டும்.' இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதி இளந்திரையன் விசாரித்தார்.அரசுகூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் டி.செந்தில்குமார் வாதிடுகையில், ''கஞ்சா வழக்கில் மனுதாரர் 2வது குற்றவாளியாக உள்ளார். மதுரை போதைபொருள் வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது. வாகனத்தை விடுவிக்கக்கோரி விசாரணை நீதிமன்றத்தில் தான் மனு தாக்கல் செய்ய முடியும். கஞ்சா வழக்குகளில் பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை இடைக்காலமாக விடுவிக்ககோர முடியாது. போதை பொருள் கடத்தலின் போது பறிமுதல் செய்யப்படும் வாகனங்கள் யாரும் உரிமை கோராததால் விசாரணை நீதிமன்றங்களிலும், காவல் நிலையங்களிலும் குவிந்து கிடக்கிறது. அந்த வாகனங்கள் பல ஆண்டுகளாக வெயிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும் சிதிலமடைந்து வருகிறது. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்'' என்றார்.



இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தரவு: ''கஞ்சா மற்றும் போதை பொருள் கடத்தல் வழக்குகளில் பறிமுதல் செய்யப்படும் வாகனங்கள் மற்றும் சொத்துக்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து சட்டத்திலும், உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளிலும் கூறப்பட்டுள்ளது. இதனை விசாரணை நீதிமன்றமும், விசாரணை அதிகாரிகளும் முறையாக பின்பற்றுவதில்லை. எனவே, போதைபொருள் கடத்தல் வழக்குகளில் வாகனங்கள் பறிமுதல் செய்யும் போது வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டால் உடனடியாக அதன் உரிமையாளர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். வாகனத்தின் பதிவு எண், பதிவுச் சான்று உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் புகைப்படங்களாக விசாரணை நீதிமன்றத்தில் சமர்பிக்க வேண்டும்.

பறிமுதல்செய்யப்படும் வாகனத்தின் உரிமையாளர், காப்பீடு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் பதிவு செய்ய வேண்டும். வாகனம் எங்கு நிறுத்தப்பட்டுள்ளது, வாகனத்தின் எண், வாகன இஞ்சின் எண் ஆகியவற்றை புகைப்படம் எடுத்து பராமரிக்க வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சமற்றும் போதை பொருட்களை உடனடியாக ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி அதன் சான்று விவரங்களை பாதுகாக்க வேண்டும். ரசாயன பகுப்பாய்வு சான்றுகள் பெற்றவுடன் போதை பொருளை அழிக்கும் குழுவிற்கு சான்றுகளையும் முழு விவரங்களையும் அனுப்பி போதைப்பொருட்களை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பறிமுதல் வாகனங்களை திரும்ப கேட்டு மனுத் தாக்கல் செய்தால், வழக்கின் தன்மையைப் பொறுத்து விசாரணை நீதிமன்றம் முடிவெடுக்க வேண்டும்.

பறிமுதல் வாகனங்களை விசாரணை முடியும்வரை வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. என்பதை போதைத் தடுப்பு சட்டப்பிரிவு சொல்கிறது. இதனை பின்பற்ற வேண்டும். கஞ்சா மற்றும் போதை பொருள் கடத்தல் வழக்குகளில் பறிமுதல் செய்யப்படும் பல வாகனங்கள் உரிமை கோரப்படாமல் உள்ளது என அரசு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். உரிமை கோரப்படாத வாகனங்கள் காவல் நிலையங்களில் உள்ளன.

எனவே, தமிழகம் முழுவதும் மண்டலம் வாரியாக போதைப் பொருள்கடத்தல்வழக்கில் உரிமை கோரப்படாத வாகனங்கள், உரிமையாளர்களால் எடுத்துச் செல்லப்பட்ட வாகனங்களின் விபரங்களை இரு மாதங்களுக்க ஒருமுறை சேகரிக்க வேண்டும். அது தொடர்பாக 3 மாதங்களுக்கு ஒருமுறை டிஜிபி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெறலாம். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## குழந்தையின் உயிரை காக்கவே வலது கை அகற்றம் விசாரணை அறிக்கையில் உள்ள 7 முக்கிய குறிப்புகள்

சென்னை , ஜூலை. 6-

குழந்தையின் கை அகற்றப்பட்ட விவகாரம் தொடர்பாக மருத்துவக் குழுவின் விசாரணை அறிக்கை வெளியாகி உள்ளது.



சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை வயது குழந்தையின் வலது கை அழுகியதால், அந்த கை அகற்றப்பட்டது. தவறான சிகிச்சையால்தான் குழந்தையின் கை பாதிக்கப்பட்டதாக பெற்றோர் குற்றம்சாட்டினர்.

இது தொடர்பாக விசாரணை நடத்த 3 மருத்துவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினர், குழந்தைக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள், செவிலியர்களிடம் விசாரணை நடத்தினர். அதைத் தொடர்ந்து குழந்தையின் நிலை குறித்து அதன் பெற்றோரிடம் தனியாக விசாரணை நடத்தினர். இதையடுத்து, விசாரணை அறிக்கையை மருத்துவர்கள் குழு, அரசிடம் சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் உள்ள 7 முக்கிய குறிப்புகளின் விவரம்: குழந்தை அனுமதிக்கப்பட்ட உடனே கால தாமதம் இன்றி அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. Venflon ஊசி தமனியில் போடவில்லை என்பது பெற்றோர்களின் வாக்குமூலம் மற்றும் மருத்துவர்களின் வாக்கு மூலம் மூலமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

மருந்து கசிவினால் ரத்த ஓட்ட பாதிப்பு ஏற்படவில்லை என்பதும் உறுதி செய்யப்படுகிறது. குழந்தையின் வலது கையில் வலி மற்றும் நிறமாற்றம் ஏற்பட்ட பின்னர் செவிலியர் மற்றும் மருத்துவர்கள் குழந்தையை பரிசோதனை செய்து உள்ளனர். குழந்தையை பரிசோதனை செய்த மருத்துவர் Thrombophlebitis என்று கணித்து சிகிச்சை அளித்துள்ளார். ரத்த நாள அடைப்பு சிகிச்சை முறைகளாலோ, செலுத்தப்பட்ட மருந்தினாலோ ஏற்படவில்லை. Pseudomonas கிருமியால் ஏற்படும் மூளைத் தொற்று ரத்த நாளத்தை பாதித்த காரணத்தால் குழந்தைக்கு வலது கையில் ரத்த ஓட்டம் பாதிப்பு ஏற்பட்டு (Arterial Thrombosis) உயிரை காப்பாற்றும் முயற்சியில் வலது கையை விடுவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## அதிமுகவில் இணைய இதுவரை 1.60 கோடி பேர் விண்ணப்பித்துள்ளனர் எடப்பாடி பழனிசாமி

சென்னை , ஜூலை. 6-

அதிமுகவில் உறுப்பினர்களாக சேருவதற்கு இதுவரை 1 கோடியே 60 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும், உறுப்பினர் சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 19ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் இபிஎஸ் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தங்களுடைய பதிவை புதுப்பித்துக் கொள்வதற்கும், புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்குமான விண்ணப்பப் படிவங்கள் தலைமைக் கழகத்தில், 5.4.2023 முதல் விநியோகிக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 4.5.2023 முதல் பெறப்பட்டு வருகின்றன.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் 2 கோடி பேர்களை உறுப்பினர்களாக சேர்த்திட வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து செயல்பட்டு வந்த நிலையில், இன்றைய தேதி வரை 1 கோடியே 60 லட்சம் பேர் உறுப்பினர்களாக சேருவதற்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைந்திட எனது இதயமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில், கழகத்தில் உறுப்பினர்களாக சேருவதற்கும், உறுப்பினர் பதிவை புதுப்பிப்பதற்குமான காலக்கெடுவை நீட்டித்து தருமாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, 19.07.2023 மாலை 5 மணிவரை நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுவே இறுதியான கால அவகாசமாகும். புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகளைப் பெற்றுள்ள கழக உடன்பிறப்புகள் மட்டுமே, கழகப் பொறுப்புகளில் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றுவதற்கும், கழக அமைப்புத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கும், வாக்களிப்பதற்கும் தகுதி உடையவர் ஆவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




## பொது சிவில் சட்டம் என்பது இந்து சிவில் சட்டமல்ல ஜார்க்கண்ட் ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் கருத்து

கோவை , ஜூலை. 6-

பொது சிவில் சட்டத்தை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



இது தொடர்பாக கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "ஆளுநர்களின் செயல்பாடு என்பது மாநில அரசுகளின் அணுமுறையையும் பொறுத்து அமைந்துள்ளது. ஆளுநர் என்பவர் ஏதோ அதிகாரம் செய்ய வந்ததாக கருதக் கூடாது. அவர் அரசியல் சட்டத்தின்படி ஒரு மாநில அரசு செயல்பட வேண்டும் என்பதை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிறார்.

யார் தவறு செய்தாலும், தவறு தவறுதான். முதல்வர் மு.க.ஸ்டாலின் இடத்தில் ஒருவேளை நான் இருந்திருந்தால், கண்டிப்பாக அமைச்சர் செந்தில் பாலாஜியை, 'நீங்கள் சிறிது காலம் பதவியில் இருந்து விலகி இருங்கள். உங்கள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் நிரூபிக்கப்படவில்லையெனில் மீண்டும் இணைத்துக் கொள்கிறேன்' என்று சொல்லி இருப்பேன். அப்படி நடப்பதுதான் எதிர்காலத்தில் தார்மிக அரசியல் வளர உதவும். அந்த வகையில்தான் இதைப்பார்க்க வேண்டும். இதை தனி நபரின் மீது எடுக்கும் பழிவாங்கும் நடவடிக்கையாக பார்க்கக் கூடாது.

பொது சிவில் சட்டம் என்பது இந்து சிவில் சட்டமல்ல. அனைவருக்கும் பொதுவான சட்டம். இதை அனைவரும் ஆதரிக்க வேண்டும். அதுதான் நமது சமுதாயத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தும். எதிர்க்கட்சிகளிடத்தில் ஒற்றுமை இருக்கிறதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. எதிர்கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படக்கூடாது என்பது எங்கள் வேலையல்ல. அவர்கள் ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர். அதிகாரத்துக்காக ஒன்று சேருவது என்பது வேறு, நாட்டு மக்களின் நன்மைக்காக ஒன்று சேருவது என்பது வேறு" என்று அவர் கூறினார்.

## யுபிஐ பயன்பாட்டு அம்சத்துடன் நோக்கியா 110 4ஜி போன் இந்தியாவில் அறிமுகம் விலை, சிறப்பு அம்சங்கள்

சென்னை , ஜூலை. 6-

இந்தியாவில் நோக்கியா 110 4ஜி (2023) மற்றும் நோக்கியா 110 2ஜி (2023) என இரண்டு ஃப்யூச்சர் போன்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதில் யுபிஐ மூலம் பயனர்கள் பண பரிவர்த்தனை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போனின் விலை மற்றும் சிறப்பு அம்சங்கள் குறித்து பார்ப்போம்.



பின்லாந்து நாட்டின் ஹெச்.எம்.டி குளோபல் நிறுவனம் நோக்கியா போன்களை உற்பத்தி செய்து, உலகம் முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்நிலையில், இந்தியாவில் நோக்கியா 110 4ஜி மற்றும் நோக்கியா 2ஜி போன்களை தற்போது இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது அந்நிறுவனம்.

இந்த போனில் இடம் பெற்றுள்ள யுபிஐ பேமெண்ட் அம்சம் தான் மற்ற ஃப்யூச்சர் ரக போன்களில் இருந்து முற்றிலும் வேறுபடுத்திக் காட்டுகிறது. நிச்சயம் ஃப்யூச்சர் போன் பயனர்கள் டிஜிட்டல் முறை பண பரிமாற்றத்திற்கு இது அழைத்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய சந்தையில் நோக்கியா ஃப்யூச்சர் போன்களின் செயல்பாட்டில் உள்ள நம்பிக்கை அதற்கான காரணமாக பார்க்கப்படுகிறது.

பில்ட்-இன் ரியர் கேமரா, ஆட்டோ கால் ரெக்கார்டிங், மியூசிக் பிளேயர், மைக்ரோ எஸ்டி கார்ட் ஸ்லாட், காம்பேக்ட் டிசைன், வயர்லெஸ் எஃப்.எம், இன்டர்நெட் அக்சஸ், 1.8 இன்ச் டிஸ்பிளே, 1450mAh பேட்டரி, 3.5 எம்எம் ஹெட்போன் ஜாக் மற்றும் யுபிஐ பேமெண்ட் வசதியை இந்த போன் உள்ளடக்கி உள்ளது. நோக்கியா 110 4ஜி போன் ரூ.2,499 மற்றும் நோக்கியா 110 2ஜி போன் ரூ.1,699-க்கும் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காஞ்சிபுரம் அருகே கல்லூரிக்குச் சென்ற முதல் நாளே வாகன விபத்தில் சிக்கி மாணவர் பலி

காஞ்சிபுரம், ஜூலை. 6-

சென்னையை சேர்ந்த ராஜன் என்பவரது மகனான ரா.தம்பிதுரை சிறு வயது முதலே காஞ்சிபுரம் ஏனாத்தூர் சமத்துவபுரம் பகுதியில் உள்ள தனது பாட்டியின் வளர்ப்பில் இருந்துள்ளார்.



காஞ்சிபுரத்தில் பிளஸ் டு முடித்த நிலையில், காஞ்சிபுரம் அடுத்த கீழம்பி கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு இளங்கலை அறிவியல் வகுப்பில் சேர்ந்துள்ளார். இந்நிலையில் நேற்று முதல் நாள் கல்லூரிக்கு சென்று விட்டு கல்லூரிக் கட்டணமும், கட்டிவிட்டு வருவதாக தனது மாமாவிடம் கூறிவிட்டு தனது இரு சக்கர வாகனத்தில் கல்லூரிக்கு சென்றுள்ளார்.

கல்லூரிக் கட்டணத்தை கட்டிவிட்டு வீடு திரும்பி கொண்டிருந்தபோது, எதிரே வந்த மினிலாரி இருசக்கர வாகனத்தின் மீதி மோதியதில் தம்பிதுரை நிலை தடுமாறி சாலையில் விழுந்தபோது தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அருகில் இருந்த கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் 108 அவசர ஊர்திக்கு தகவல் தெரிவித்தும், காவல் துறைக்கு வாகன விபத்து தொடர்பான தகவல் அளித்தனர்.

108 வாகனம் விரைவாக வந்து அவரை பரிசோதித்த நிலையில் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக சம்பவ இடத்திலேயே அவர் பலியானதாக தெரிவித்துள்ளனர். வாகன விபத்து குறித்து பாலு செட்டி காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து அவரது உடலை காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு உடற்கூறு ஆய்விற்காக அனுப்பி வைத்து லாரியை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கல்லூரிக்குச் சென்ற முதல் நாளே வாகன விபத்தில் சிக்கி பலியான சம்பவம் கல்லூரி மாணவர்களுடைய அதிர்ச்சியும் அவரது உறவினர்களும் பெருத்த சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## அரசு பேருந்து பெரம்பூரிலிருந்து செங்குன்றம் வரை நீட்டிக்கப்படுமா? பயணிகள் கோரிக்கை

சென்னை,ஜூலை,6

சென்னை பாரிமைனையில் இருந்து செங்குன்றம் வரை செல்லும் தடம் எண் பஸ் 242. இந்த தடம் எண் பஸ் காலை மற்றும் மாலை நேரங்களில் கூட்ட நெரிசல் காரணமாக பயணிகள் அவதிப்பட்டு வருகின்றன். மதியம் நேரங்களில் சில பஸ்கள் சற்று காலியாக செல்வது உண்டு.

பெரம்பூர் - விநாயகபுரம் செல்லும் தடம் எண் 142 பெரும்பாலான நேரங்களில் காலியாகவே செல்கின்றனர். இந்த தடம் எண்ணை நீடித்து பெரம்பூர் - செங்குன்றம் வரை செல்ல நடவடிக்கை மேற்கொண்டால் பஸ்சின் கூட்டம் சற்று கட்டுப்படுத்த முடியும் என பயணிகளின் கோரிக்கையாகும்.

அதேப்போல் தடம் எண் 29C பெரம்பூரில் இருந்து ஓட்டேரி, பிரிக்கிலின் சாலை வழியாக புரசைவாக்கம் சென்று திருவான்மியூர் செல்கிறது. இதேப்போல் பெரம்பூரில் இருந்து ஓட்டேரி,



தாசமகான், பட்டாளம், டவுட்டன், கே.எம்.சி வழியாக திருவான்மியூர் செல்ல புதிய தடம் எண் கொண்ட பஸ்கள் இயக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் தடம் எண் 29E பெரம்பூரில் இருந்து திருவேற்காடு செல்கிறது. முன்பு தாசமகான், பட்டாளம், டவுட்டன் வழியாக சென்று கொண்டு இருந்தது. காலப்போக்கில் ஓட்டேரி பிரிக்லின் சாலை வழியாக திருப்பி விடப்பட்டது. அந்த வழியாக செல்லும் பஸ்களில் பெரும்பாலான பயணிகள் பயணிப்பது இல்லை. போக்குவரத்துக்கு லாபம் தரக்கூடிய பழைய வழித்தடத்தில் இயக்க வேண்டும் எனவும் கோரிக்கை எழுந்துள்ளது.

## அமைச்சர் செந்தில் பாலாஜியை விடுவிக்கக் கோரிய வழக்கு மூன்றாவது நீதிபதியாக சி.வி.கார்த்திகேயன் நியமனம்

சென்னை , ஜூலை. 6-

அமைச்சர் செந்தில் பாலாஜியை விடுவிக்கக் கோரி, அவரது மனைவி தொடர்ந்த ஆட்கொணர்வு வழக்கில், உயர் நீதிமன்ற நீதிபதிகள் இருவர் மாறுபட்ட தீர்ப்பை வழங்கினர். இதையடுத்து, இந்த வழக்கில் 3-வது நீதிபதியாக சி.வி. கார்த்திகேயன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கில் அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த ஜூன் 14-ம் தேதி அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்தனர். இந்நிலையில், தனது கணவரை அமலாக்கத் துறை அதிகாரிகள் சட்ட விரோதமாக கைது செய்துள்ளதாகவும், அவரை உடனடியாக விடுவிக்கக் கோரியும் செந்தில் பாலாஜியின் மனைவி எஸ்.மேகலா, சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு விசாரணை நீதிபதிகள் ஜெ.நிஷா பானு, டி.பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் நடைபெற்றது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை தள்ளிவைத்திருந்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கில் நேற்று முந்தினம் நீதிபதி ஜெ.நிஷாபானு சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்து நேரடியாகவும், நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் இருந்து காணொலி வாயிலாகவும் மாறுபட்ட தீர்ப்பை பிறப்பித்தனர். முதலில் தனது தீர்ப்பை வாசித்த நீதிபதி ஜெ.நிஷாபானு, ''அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை கைது செய்தது சட்டவிரோதம் என்பதால், ஆட்கொணர்வு மனுவை விசாரணைக்கு ஏற்கிறேன். எனவே, செந்தில் பாலாஜியை உடனடியாக விடுவிக்க வேண்டும்" என்றார்.

ஆனால் நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி தனது தீர்ப்பில், "அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்தது சட்டவிரோதம் கிடையாது. எனவே, இந்த ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என்பதால் தள்ளுபடி செய்கிறேன்." என்று தெரிவித்தார். நீதிபதிகள் இருவரும் மாறுபட்ட தீர்ப்பு அளித்ததால், மூன்றாவது நீதிபதியை நியமிக்க, இந்த வழக்கு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்குப் பரிந்துரைக்கப்பட்டது. இந்நிலையில், 3வது நீதிபதியாக சி.வி. கார்த்திகேயனை நியமித்து உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக ''இந்த வழக்கில் 3-வது நீதிபதியை சென்னை உயர் நீதிமன்றம் ஒரு வாரத்தில் நியமிக்க வேண்டும். மேலும், மெரிட் அடிப்படையில் இந்த வழக்கை விசாரிக்க வேண்டும். உச்ச நீதிமன்ற உத்தரவுகள் எதுவும், சென்னை உயர் நீதிமன்ற விசாரணையில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது." என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

## "மாமன்னன் படத்தை மானுடம் போற்றும் படைப்பாக்கியவர் வடிவேலு" உதயநிதி பாராட்டு

சென்னை , ஜூலை. 6-

மாமன்னன் படத்தை மானுடம் போற்றும் படைப்பாக்கியவர்" என நடிகர் வடிவேலுவுக்கு உதயநிதி ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.



இது தொடர்பாக நடிகர் உதயநிதி ஸ்டாலின் தனது ட்விட்டர் பக்கத்தில் வீடியோ ஒன்றை பதிவிட்டு, "தன் எதார்த்த மற்றும் தேர்ந்த நடிப்பால் மாமன்னன் திரைப்படத்தை மானுடம் போற்றும் சாதனைப்படைப்பாக்கிய அண்ணன் வடிவேலுவை நேரில் சந்தித்து அன்பையும், நன்றியையும் தெரிவித்தோம்" என பதிவிட்டுள்ளார். மேலும், அவர் பதிவிட்டுள்ள வீடியோவில் உதயநிதி ஸ்டாலினும், மாரி செல்வராஜும் இணைந்து வடிவேலுவுக்கு மாலை அணிவிக்கின்றனர். தொடர்ந்து ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனத்தின் இணை தயாரிப்பாளர் செண்பக மூர்த்தி, வடிவேலுவிடம் பூங்கோத்து கொடுத்து நன்றி தெரிவித்துள்ளார்.

மாரி செல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி ஸ்டாலின், வடிவேலு நடித்துள்ள படம் 'மாமன்னன்'. ஃபஹத் ஃபாசில், கீர்த்தி சுரேஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். ரெட் ஜெயன்ட் மூவீஸ் நிறுவனம் படத்தை தயாரித்துள்ளது. தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படம் கடந்த ஜூன் 29-ம் தேதி பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்று வருகிறது.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் நுண் தொழில் நிறுவன நிதியினை 39 ஊராட்சிகளுக்கு 369 பயனாளிகளுக்கு ரூ.52.83 லட்சம் நிதியினை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி வழங்கினார். அருகில் ஊரக வளர்ச்சித்துறை இணை இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன், தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம்திட்ட செயல் அலுவலர் வேல்முருகன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மணிவண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கோ.அர.நரேந்திரன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முத்துசாமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.தயாள விநாயக அமல்ராஜ் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெயபாலன், மாவட்ட தாட்கோ மேலாளர் சுகந்தி, மகளிர் சுய உதவிக்குழுவினர் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

## சீர்காழியில் பள்ளி நேரங்களில் மணல் ஏற்றி சென்ற லாரியை விசிக–வினர் சிறைபிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்




சீர்காழி.ஜுலை,6

விழுப்புரம் முதல் நாகப்பட்டினம் வரை நான்கு வழிச்சாலை விரிவாக்கம் பணி கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதற்காக மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழி அருகே உள்ள திருமுல்லைவாசல் கிராமத்தில் இருந்து நாள்தோறும் 500-க்கும் மேற்பட்ட கனரக லாரிகள் மூலம் இரவு பகலாக சவுண்டுகள் ஏற்றி செல்வதால் சாலைகளில் இரு புறத்திலும் மணல்கள் சிதறி விபத்து ஏற்பட்டு வருகிறது.

மேலும் சாலையில் சிதறி கிடக்கும் மண்களால் தினந்தோறும் ஏராளமானோர் விபத்து ஏற்பட்டு பாதிக்கப்பட்டு வருகின்றனர். பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்கள் விபத்துகளில் சிக்குவதால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் சமூக அலுவலர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனை கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக போராட்டம் அறிவித்து இருந்த நிலையில், கடந்த மாதம் 19 தேதி சீர்காழி வட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சு வார்த்தை நடைபெற்றது. இதில் பள்ளி நேரத்தில் காலை 8 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 5 மணி வரையிலும் மணல் ஏற்றி செல்லலாரிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சீர்காழி நகர் பகுதிகளில் மணல் ஏற்றி வந்த மூன்று லாரிகளை விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் தடுத்து நிறுத்தி சிறை பிடித்தனர். பின்னர் காவல் நிலையத்துக்கு தகவல் அளித்து மூன்று லாரிகளையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். மேலும் பள்ளி நேரங்களில் லாரி சென்றால் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும் என விடுதலை சிறுத்தை கட்சியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் சிறிது நேரம் சீர்காழி பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## சீர்காழியில் போன் ஆப் மூலம் அறிமுகமாகி 70 ஆயிரம் பணம் பறித்த 4 பேர் கைது



சீர்காழி.ஜுலை,6

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வைப்புச் சாவடி பகுதியில் வசிக்கும் பாலு என்பவரது மகன் விக்னேஷ் (26). இவரிடம் கடந்த 8ந்தேதி தூத்துக்குடி அருகே கோவில்பட்டி வீரவாஞ்சிநகர் பகுதியைச் சேர்ந்த கருப்புசாமி என்கிற கார்த்திக் (25), மணி என்கிற மணிராஜ் (26), மற்றும் சிதம்பரம் நற்கந்தன்குடி பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் (25 ),மேலும் ஒரு சிறுவன் ஆகிய நான்கு பேரும் Grndr GAY ஆப் மூலம் அறிமுகம் ஆகி அவரவர் தகவல்களை ஷேர் செய்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் விக்னேஷ் சீர்காழியில் ஏதேனும் தெரிந்த இடம் இருக்கிறதா சந்திக்க வேண்டும் என 4 நபரிடம் கேட்டுள்ளார்.

அப்போது ஜுன் 9ந் தேதி சீர்காழிக்கு வரச் சொல்லி புதிய பேருந்து நிலையம் வந்த விக்னேஷை புதிய பேருந்து நிலையத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்று உப்பனாற்று கரையோரம் உள்ள கருவை மரக் காட்டுப் பகுதியில் நான்கு பேரும் சேர்ந்து விக்னேஷை கீழே தள்ளி தாக்கி கத்தியை காட்டி மிரட்டி செல்போன் மற்றும் ஏடிஎம் கார்டை பிடுங்கிக் கொண்டு அதற்கான கோடு நம்பரையும் தெரிந்து கொண்டு அக்கவுண்டில் இருந்த 70 ஆயிரம் பணத்தை ஏடிஎம் மூலம் எடுத்துகொண்டு இதனை வெளியில் சொன்னால் கொலை செய்து விடுவேன் என்றும் மிரட்டி உள்ளனர்.

பணத்தை பறிகொடுத்த விக்னேஷ் சீர்காழி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின்படி வழக்கு பதிவு செய்து குற்றவாளிகளை சீர்காழி போலீசார் தேடி வந்த நிலையில் இன்று போலீசாரின் வாகன சோதனையின் போது முன்னுபின்முரண்பாடாக பதில் அளித்ததின் பேரின் குற்றவாளியை கைது செய்த போலீசார் நான்கு பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

ஆப் மூலம் பழகி பணமோசடியில் ஈடுபட்ட சம்பவம் சீர்காழி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஆய்வுக்கு வந்த மாவட்ட கலெக்டர் பாடல் பாடி அசத்திய மழலைகள் !



சீர்காழி, ஜுலை. 6-

சீர்காழி அருகே அரசு பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை திடிரென ஆய்வு செய்த ஆட்சியர் மகாபாரதி, பாட்டு பாடி அசத்திய ஒன்றாம் வகுப்பு மாணவர்களை பாராட்டினார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே செம்பதனிருப்பு கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பு படிக்கும் மாணவர்களை பாட்டு பாடச் சொல்லி கற்றல் திறனை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். மாணவர்கள் அழாக பாட்டு பாடி தங்களின் திறமையை வெளிகொணர்ந்தனர். மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஆட்சியர் பாராட்டினார்.

## காரைக்கால் மாவட்ட கலெக்டர் தலைமையில் இந்திய கடலோர காவல் படை அதிகாரிகளுடன் ஆலோசனை



காரைக்கால், ஜுலை. 6-

காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் பேரிடர் மீட்புத் துறையின் மூலம் ஒரு கப்பலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டதை தொடர்ந்து தகவல் கிடைக்கப்பெற்று மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் ஆட்சியர் வளாகத்தில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளான பயிற்சி ஆட்சியர் சம்யக்ஜெயின்,முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மனீஷ் மற்றும் காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்ரமணியன் துனை ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) பாஸ்கரன் இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் ஆட்சியர் ஆலோசனை நடத்தினார்.

இதன் அடுத்த கட்டமாக விபத்து ஏற்பட்ட கப்பலில் இருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணமும் தண்ணீரில் வாழும் உயிரினங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையிலும் அந்த எண்ணையை பிரித்து எடுக்கும் பணி நேற்று மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் காவல்துறை, மருத்துவத்துறை, தீயணைப்புத்துறை, மாவட்ட நிர்வாகத்தால் உருவாக்கப்பட்ட தன்னார்வலர் மீட்பு குழு மற்றும் ஆப்தமித்ரா குழுவினர் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் கிராம மீனவர்கள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள், நிறைவில் ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆட்சியர் அனைத்து துறை அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

## ஆதிதிராவிடர் நலத்துறையால் வழங்கப்பட்ட நிலம் ஆக்கிரமிப்பு ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் ஆய்வு



தரங்கம்பாடி, ஜுலை. 06-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, கஞ்சாநகரம் கிராமத்தில் வசிக்கும் 64 ஆதிதிராவிடர் குடும்பத்தினருக்கு கடந்த 1998 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது. அந்த இடத்துக்கு செல்ல வாய்க்காலை கடந்து செல்ல வேண்டி இருந்ததால் அங்கு பாலம் வசதி இல்லாத காரணத்தால் அரசால் வழங்கப்பட்ட அந்த இடத்தில் யாரும் குடியேறவில்லை. இதனை பயன்படுத்திக் கொண்டு பலர் அந்த இடத்தை தற்போது ஆக்கிரமித்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதியை சந்தித்த 64 குடும்பத்தினர் தங்களுக்கு வழங்கப்பட்ட இடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி, அளவீடு செய்து அதே இடத்தில் தொகுப்பு வீடுகள் அமைத்து தர வேண்டும் என்றும் அந்த இடத்துக்கு செல்வதற்கு பாலம் வசதி ஏற்படுத்தி தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் அம்பிகாபதி ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் நாகவல்லி சர்வேயர் சிந்துஜா கிராம நிர்வாக அலுவலர் மணிகண்டன் உள்ளிட்டோர் ஆதிதிராவிடர் மக்களுக்கு வழங்கப்பட்ட இடத்தையும் பாலம் அமைய உள்ள இடத்தையும் பார்வையிட்டு விரைவில் ஆக்கிரமிப்புகளை அகற்றி மறு அளவீடு செய்து அந்த 64 பயனாளிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்..

## ஆவுடையார்கோவில் தாலுகா மீமிசல் அருகே மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம்



ஆவுடையார்கோவில், ஜுலை.6-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தொகுதிக்கு உட்பட்ட ஆவுடையார் கோவில் தாலுகா மீமிசல் அருகில் உள்ள வேள்வரை ஒத்தக்கடையில் செல்வகுமார் நினைவாக கள்ளர் சமுதாய நல சங்கத்தின் சார்பாக நடத்தும் மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

இதில் 45மாட்டு வண்டிகள் பங்கேற்றது, இதில் பெரிய மாடு, நடுமாடு, புது பூட்டு ஆகிய பிரிவுகளில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மாட்டுவண்டிகள் பங்கேற்றனர். போட்டியில் வெற்றி பெற்ற மாடுகளுக்கு சுமார் 3லட்சம் ரொக்க பணமும், கேடயமும் வழங்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட அனைத்து மாட்டின் உரிமையாளர்களுக்கும் மரக்கன்றுகள் ஆலத்தூர் சேகர் நினைவாக வழங்கப்பட்டது. இந்த பந்தயத்தில் புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, தேனி, ராமநாதபுரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் இருந்து மாட்டு வண்டிகள் கலந்து கொண்டன. நிர்ணயிக்கப்பட்ட எல்கையை நோக்கி பந்தயத்தில் கலந்த மாடுகள் சீறிப்பாய்ந்தன, சாலையின் இருபுறமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நின்று பந்தயத்தை கண்டு களித்தனர், பாதுகாப்பு பணியை மீமிசல் காவல்துரையினர் மேற்கொண்டனர்.

## மயிலாடுதுறையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் இலவச பயிற்சி வகுப்புகள்

**மாவட்ட ஆட்சியர் தகவல்**



மயிலாடுதுறை, ஜுலை- 06:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ( TNPSC ) அறிவிக்கப்படவுள்ள தொகுதி-1&2 மற்றும் தொகுதி-4 தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் தருமபுரம் ஆதினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வரும் 08.07.2023 சனிக்கிழமையன்று தொடங்குவது தொடர்பாக மரியாதைக்குரிய மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி தகவல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் (TNPSC) தமிழக அரசில் காலியாக உள்ள பல்வேறு காலிப்பணியிடங்களுக்கான அறிவிப்பு தொகுதி-1&2 மற்றும் தொகுதி -4 தேர்வுகளுக்கான அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது. தொகுதி-1&2 தேர்விற்கு கல்வித்தகுதி ஏதேனும் ஒர் இளங்கலை பட்டப்படிப்பு தேர்ச்சி மற்றும் தொகுதி-4 தேர்விற்கு பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். மேலும்இத்தேர்வுகள்குறித்த கல்வித்தகுதி, வயதுவரம்பு, காலிப்பணியிடங்கள் போன்ற இதர விவரங்களை www.tnpsc.gov.in என்ற இணையத்தள முகவரியில் விளம்பர அறிவிப்பை பார்த்து தெரிந்துகொள்ளலாம்.

மேற்கண்ட தொகுதி-1&2 மற்றும் தொகுதி-4 விளம்பர அறிவிப்பை எதிர்நோக்கி இலவச பயிற்சி வகுப்புகள் மயிலாடுதுறை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் வாயிலாக தருமபுரம் ஆதினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வரும் 08.07.2023 சனிக்கிழமையன்று காலை 10 மணிக்கு தொடங்கி வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்தேர்விற்கான பாடக்குறிப்புகள் வழங்கப்பட்டு, மாதிரித் தேர்வுகளும் நடத்தப்படவுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த அரசுப் பணிக்கு தயாராகும் இளைஞர்கள் தங்களது பெயர் மற்றும் கல்வித்தகுதியினை குறிப்பிட்டு 9499055904 என்ற வாட்ஸ்ஆப் எண்ணிற்கு தகவல் அனுப்பி தங்களதுபெயரை பதிவு செய்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறது.மேலும் போட்டித்தேர்வெழுதும் இளைஞர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி இவ்விலவச பயிற்சி வகுப்புகளில் நேரடியாக பங்கேற்று பயனடையுமாறு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

## நவீன மீன் விற்பனை நிலையத்தில் மீன்களை திருடிய இருவரை சிசிடிவி காட்சிகள் மூலம் போலீசார் கைது செய்தனர்



சீர்காழி,ஜுலை,6

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதி உப்பனாற்று கரையில் தமிழக அரசு மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில் கீழ் உள்ள நவீன மீன் விற்பனை நிலையம் இயங்கி வருகிறது.

இந்த விற்பனை நிலையத்திற்கு அருகே உள்ள மீன் தொட்டியில் விற்பனை போக மீதம் இருந்த ரூ10 ஆயிரம் மதிப்புள்ள இறால் மற்றும் கெண்டை மீன்கள் கடந்த 27 ஆம் தேதி மர்ம நபர்களால் திருடப்பட்டது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து கடை உரிமையாளர் சிவகுமார் என்பவர் சீர்காழி காவல் நிலையத்தில் புகார் செய்தார். இதனைத் தொடர்ந்து புகாரின் அடிப்படையில் சீர்காழி போலீசார் அந்த பகுதியில் உள்ள சிசிடிவி கேமராவை ஆய்வு செய்ததில் சீர்காழி அருகே சட்டநாதபுரம் வடக்கு தெருவை சேர்ந்த செவத்தையன் மகன் செல்வகுமார் (வயது 31) ஈசானிய தெருவை சேர்ந்த ராமசாமி மகன் விஜயகுமார் (வயது 56) ஆகிய இருவரும் இறால் மற்றும் மீன்களை திருடியது தெரிய வந்தது.

இதனை தொடர்ந்து சீர்காழி போலீசார் இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து சிறையில் அடைத்தனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட வேலாயுதபுரத்தில் ரூ-19 லட்சத்தில் ஊராட்சி மன்ற கட்டிடம், தென்காசி முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா. செல்லத்துரையால் திறந்து வைக்கப்பட்டது. தலைமை சு. வேலுத்தாய் குமார் ஊராட்சி மன்ற தலைவர், வரவேற்புரை சுரேஷ் பாண்டியன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர், முன்னிலை பி. சுப்பம்மாள் பால்ராஜ் ஒன்றிய குழு பெருந்தலைவர் கடையநல்லூர், துணைத்தலைவர் ஐவேந்திரன்தினேஷ், மற்றும் நிகழ்ச்சியில் திமுக நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ், ஒன்றியச் செயலாளர் சுரேஷ், மாவட்ட கவுன்சிலர் பூங்கொடி, திட்டக்குழு உறுப்பினர் ரா.முருகன், ஒன்றிய கவுன்சிலர் பகவதியப்பன், வலசை மதி, நல்லையா, வார்டுஉறுப்பினர்கள் மாதவன், மதுமதி, சரண்யா, ஜெகன், ராமலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். நன்றியுரை ஊராட்சி செயலர் சீனியம்மாள் நன்றி கூறி நிறைவு செய்தார்.

## காரைக்காலில் ஜுலை 15, மற்றும் 16–ஆம் தேதிகளில் முதல் முறையாக சிறப்பு இருதய சிகிச்சை மருத்துவ முகாம்



காரைக்கால், ஜுலை.6-

காரைக்காலில் வருகின்ற ஜுலை 15, மற்றும் 16-ஆம் தேதிகளில் முதல் முறையாக சிறப்பு இருதய சிகிச்சை மருத்துவ. முகாம் நடத்தப்பட உள்ளது. இந்த முகாம் இந்த இரு நாட்கள் மட்டுமே நடைபெறும்.

இதில் சங்கரா ஹார்ட் பவுண்டேஷன், மற்றும் ராமச்சந்திரா மெடிக்கல் காலேஜ் இணைந்து டாக்டர். மூர்த்தி தலைமையிலான 10 சிறப்பு இருதய சிகிச்சை மருத்துவர்கள் இணை மருத்துவர்கள, உதவியாளர்கள் ஆகியோர் தகுந்த மருத்துவ உபகரணங்களுடன் காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு சனி மற்றும் ஞாயிற்றுகிழமை ஆகிய இரு தினங்கள் வருகை தர உள்ளனர். இவர்கள் இதய நோயாளிகளை கண்டறிந்து அவர்களில் அவசியமான இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளிகளுக்கு இலவசமாக அறுவை சிகிச்சை செய்ய உள்ளனர்.

இதற்காக காரைக்கால் மாவட்ட நிர்வாகமும், அரசு மருத்துவமனையும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை செய்ய உள்ளன. நாளை முதல் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள இருதய நோயாளிகள், அரசு மருத்துவமனைக்கு நேரில் வந்து அவர்களின் பெயர்களை பதிவு செய்ய வேண்டும். அதன் பின்னர் அந்த நோயாளிக்கு தேவையான மருத்துவ பரிசோதனைகள் செய்த பின் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக நேற்று காலை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறிய போது இது போன்ற இருதய அறுவை சிகிச்சை முகாம்களை மிசோராம் மாநிலத்தில்தான் மாவட்ட ஆட்சியராக பணிபுரிந்த போது நடத்தி பலர் பயன் பெற்றனர் என்றும் அதுபோல காரைக்கால் மாவட்டத்தில் உள்ள இருதய நோயாளிகள் நலமடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த மருத்துவ சிகிச்சை முகாமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார். இந்த செய்தியாளர்கள் சந்திப்பில் நல வழித்துறை துணை இயக்குனர் டாக்டர். சிவராஜ்குமார், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். கண்ணகி, உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி மதன்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

## அறந்தாங்கி அருகே ஆலத்தூர் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேக விழா



அறந்தாங்கி, ஜுலை.6-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே ஆவுடையார்கோவில் தாலுகா ஆலத்தூர் கிராமத்தில் அமைந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடத்துவதென அப்பகுதி கிராம மக்களால் முடிவு செய்யப்பட்டது.

இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கடந்த 3ம் தேதி திங்கள்கிழமை கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது, அதனை தொடர்ந்து 3நாட்களாக 4கால யாக பூஜை நடைபெற்று வந்தது, விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்று பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது. அதனை தொடர்ந்து இராமானுஜம் அய்யங்கார் தலைமையில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தைக் காண திரண்டிருந்த அப்பகுதியை சுற்றியுள்ள கிராம மக்கள், ஆன்மீக மெய்யன்பர்கள் சாமி தரிசனம் செய்தனர், அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# சங்கரன்கோவிலில் ஆடித்தபசு திருவிழாவை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம்

சங்கரன்கோவில், ஜூலை.6-

சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் தென் தமிழகத்தின் மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்தலமாகும். இங்கு ஆடி மாதம் ஆடித்தபசு திருவிழா நிகழ்வினை காண இந்தியா முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் சங்கரன்கோவிலுக்கு வருவது வழக்கம், இந்த இத்திருவிழா வரும் ஜூலை 21ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்குகிறது.



இந்த ஆடித்தபசு திருநாள் 12 நாட்கள் வெகு விமர்சியாக நடைபெறும். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான கோமதி அம்மனுக்கு சிவபெருமான் சங்கரநாராயணராக காட்சி கொடுக்கும் வைபவம் ஜூலை மாதம் 31ம் தேதி திங்கள்கிழமை நடைபெற உள்ளது. ஆடித்தபசு திருவிழாவை முன்னிட்டு எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறையினர் ஆலோசனைக் கூட்டம் சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்திற்கு ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார். சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன், நகராட்சி கமிஷனர் சபாநாயகம், கோயில் துணை ஆணையர் ஜான்சி ராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் எம்எல்ஏ ராஜா கலந்து கொண்டு பேசினார். இதில் நகராட்சி துணை சேர்மன் கண்ணன், காவல் ஆய்வாளர் சகாயசாந்தி, மருத்துவ அலுவலர் மகாலட்சுமி ,நெடுஞ்சாலை துறை திருமலைச்சாமி , பலவேசம்,மின்வாரிய உதவி பொறியாளர்கள் கணேசராமகிருஷ்ணன்,

தங்கமாரிமுத்து, தீயணைப்பு துறை சார்பில் சரவணன் மற்றும் போக்குவரத்து காவல்துறையினர், நகராட்சி கவுன்சிலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அதிமுக முன்னாள் அமைச்சர்களின் ஊழல் வழக்குகளில் விசாரணையை தொடங்க அனுமதி வழங்க வேண்டும்: ஆளுநருக்கு சட்ட அமைச்சர் ரகுபதி கடிதம்

சென்னை , ஜூலை.6-

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளின் விசாரணையை தொடங்க அனுமதி வழங்க வேண்டும் என்று ஆளுநர் ரவிக்கு, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கடிதம் எழுதியுள்ளார்.

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது ஊழல் வழக்குகள் தொடர்வதற்கான அனுமதி நீண்ட காலமாக நிலுவையில் இருப்பதையும், பல்வேறு மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பதையும் சுட்டிக்காட்டி, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தமிழக ஆளுநர் ஆர்.என். ரவிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், "முன்னாள் அதிமுக அமைச்சர்களான டாக்டர் சி. விஜயபாஸ்கர் மற்றும் பி.வி.ரமணா ஆகியோர் குட்கா / மாவா விநியோகிப் பாளர்களிடமிருந்து சட்ட விரோதமாகப் பணம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பாக உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு மத்திய புலனாய்வு அமைப்பு (சிபிஐ) வழக்குப் பதிவு செய்து விசாரித்து, இவர்கள் மீது நீதிமன்ற விசாரணை தொடங்குவதற்கு இசைவு ஆணையை சிபிஐ கோரியது.

மாநில அமைச்சரவையும் அந்த இசைவு ஆணை கோரும் சி.பி.ஐ.-யின் கோரிக்கையை ஆளுநர் அலுவலகத்துக்கு 12.09.2022 அன்று அனுப்பியது. ஆனால் துரதிருஷ்டவசமாக இதுவரையில் இந்த கடிதம்



தொடர்பாக எவ்வித பதிலும் கிடைக்கப் பெறாமல் முன்னெப்போதும் இல்லாத வகையில் தாமதப்படுவதால் இந்த வழக்கில் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

மேலும், இரண்டு நிகழ்வுகளில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சராக இருந்த கே.சி. வீரமணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கிட இசைவு ஆணை கோரியது. இந்தக் கோரிக்கைகளுக்கு மாநில அமைச்சரவை அனுமதி அளித்து அதற்கான கடிதங்களை முறையே 12.09.2022 மற்றும் 15.05.2023 ஆகிய தேதிகளில் ஆளுநர் அலுவலகத்திற்கு அனுப்பியது. இந்த கோரிக்கை கடிதங்களும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன. முந்தைய அதிமுக அமைச்சர்கள் மீதான எந்த ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளிலும் நீதிமன்ற விசாரணையைத் தொடங்கிட தேவையான இசைவு ஆணையை இதுவரை ஆளுநர் வழங்கவில்லை.

ஊழல் வழக்குகளில் இசைவு ஆணை நிலுவையில் இருப்பது தவிர, மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட பதின்மூன்று (13) மசோதாக்கள் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளன. இவற்றில் இரண்டு மசோதாக்கள் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள முக்கியமான கோப்புகள் மற்றும் மசோதாக்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, இனியும் தாமதிக்காமல் ஊழல் வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை தொடங்கிட இசைவு ஆணையையும், மசோதாக்களுக்கு ஒப்புதலும் வழங்க வேண்டும்" என்று சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கடிதத்தில் கூறியுள்ளார்.

# புதுக்கோட்டையில் ஆறாவது புத்தகத் திருவிழாவிற்கான ஆட்டோ பிரச்சார பதாகைகள் வெளியீடு

புதுக்கோட்டை, ஜூலை.6-

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நகர்மன்ற வளாகத்தில் ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 6 வரை 10 நாட்கள் புத்தகத் திருவிழா கொண்டாடப்படுகிறது. புதுக்கோட்டையின் விழாக்களில் அனைவரையும் கவர்ந்த ஒன்றாக கருதப்படும் புதுக்கோட்டை புத்தகத் திருவிழா பணிகள் பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.



இவ்விழாவின் வரவேற்புக்குழு தலைவராக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மெர்சிரம்யா இருந்து செயல்படுகிறார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் உள்ளிட்டோர்களைக் கொண்ட வழிகாட்டி குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. கவிஞர்கள், அறிவியல் இயக்க நிர்வாகிகளைக் கொண்ட ஒருங்கிணைப்பாளர்கள் அரசுத் துறைகளோடு இணைந்துவிழா ஏற்பாடுகளை கவனித்து வருகின்றனர்.

மாவட்டம் முழுவதும் புத்தகத் திருவிழா விளம்பரப் பணிகள் பரபரப்பாக நடந்து வருகிறது. இதன் ஒருபகுதியாக நேற்று புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்கள் ஆட்டோ பிரச்சார பதாகைகளை வெளியிட்டு பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் துண்டு பிரசுரங்கள் வழங்கி பிரச்சாரம் செய்தனர். இதில் புத்தக திருவிழா ஒருங்கிணைப்பளார்கள் கவிஞர் தங்கம் மூர்த்தி, ராஜ்குமார், மணவாளன், ம.வீரமுத்து, மு.முத்துக்குமார், பவனம்மாள், கவிஞர் ஜீவி மற்றும் வரவேற்புக்குழுவினர் கவிஞர் கவிகார்த்திக், யோகா பாண்டியன், கராத்தே கார்த்திகேயன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் பள்ளி, கல்லூரி, நூலகங்கள், பொதுமக்கள் கூடும் ஆயிரக்கணக்கான இடங்களில் லட்சக்கணக்கில், தொடர்ந்து ஒரு மணி

நேரம் புத்தகங்கள் வாசிக்கும் புதுக்கோட்டை வாசிக்கிறது நிகழ்வை புதுக்கோட்டை அரசு இராணியார் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சியர் காலை 11 மணிக்கு தொடங்கிவைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது



மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு 75, வசந்தநகர் 3வது மேற்கு 1வது குறுக்கு தெருவில் ரூ.7 லட்சம் மதிப்பீட்டிலும், வார்டு 54, காஜிமார் முதல் தெரு மற்றும் ஹீரா நகர் ஆகிய 2 பகுதிகளில் ரூ.23.50 லட்சம் மதிப்பீட்டிலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலைகளை மதுரை மத்திய தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் மேயர் இந்திராணி பொன்வசந்த், மண்டலத் தலைவர் பாண்டிச் செல்வி, உதவிஆணையாளர், மாநகராட்சி மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், சுகாதார அலுவலர், உதவி பொறியாளர்கள், கண்காணிப்பாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சில தினங்களுக்கு முன்பு மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு திறந்து விடப்பட்ட காவிரி நீர் கடைமடை பகுதியான காரைக்கால் வந்தடைந்தது. இன்று காலை 9.00 மணியளவில் போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் திருநள்ளாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி. ஆர். சிவா மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன ஆகியோர் முன்னிலையில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடும் நிகழ்வு நடைபெற உள்ளது.

# தென்காசியில் மேல்நிலை நீர் தேக்கதொட்டி இயக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள், காவலர்கள், சங்க ஆர்ப்பாட்டம்

தென்காசி, ஜூலை.6-

தென்காசியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கிராம ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள், மற்றும் தூய்மை காவலர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



கிராம ஊராட்சிகளில் பணி புரிந்து வரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டப்படி மாத சம்பளம் ரூபாய் 13,848, தூய்மை பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியத்தில் ரூபாய் 11, 848 மற்றும் இதர படிகள், தூய்மை காவலர்களுக்கு அறிவிக்கப்பட்ட சம்பளம் ரூபாய்5ஆயிரத்தைஉடனே வழங்கவும், கொரோனா ஊக்கத்தொகை உள்ளிட்ட நிலுவையில் உள்ள கோரிக்கைகளை வலியுறுத்திதென்காசிபுதிய பேருந்து நிலையம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் அருணாசலம் தலைமை வகித்தார்.

மாவட்ட துணைத் தலைவர் ஏழுமலை வரவேற்றார், மாவட்டச் செயலாளர் சித்தராஜன் முன்னிலை வகித்தார், ஊரக வளர்ச்சித் துறை மாவட்டத் தலைவர் கருப்பையா துவக்கி வைத்தார். ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் முத்து கிருஷ்ணன், மாவட்ட பொருளாளர் சின்னசாமி, ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்கமாவட்டசெயலாளர் சுப்பிரமணியன், ஆகியோர் பேசினர். ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் குருசாமி, தூய்மை பணியாளர்கள் சங்க மாவட்ட இணை செயலாளர்கள் தங்கவேல், நிறைவு உரையாற்றினர். முடிவில் சாகுல் ஹமீது நன்றி கூறினார்.

# மருத்துவக் குழு விசாரணை அறிக்கையில் அத்தனையும் பொய் கை அகற்றப்பட்ட குழந்தையின் தாய் அதிருப்தி

சென்னை , ஜூலை.6-

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ஒன்றரை வயது குழந்தையின் கை அகற்றப்பட்ட விவகாரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையில் தங்களுக்கு துளிகூட திருப்தியே கிடையாது என்று குழந்தையின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை வயது குழந்தையின் வலது கை அழுகியதால், அந்த கை அகற்றப்பட்டது. தவறான சிகிச்சையால்தான் குழந்தையின் கை பாதிக்கப்பட்டதாக பெற்றோர் குற்றம் சாட்டினர். இது தொடர்பாக விசாரணை நடத்த 3 மருத்துவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினர், குழந்தைக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள், செவிலியர்களிடம் விசாரணை நடத்தினர். அதைத் தொடர்ந்து குழந்தையின் நிலை குறித்து அதன் பெற்றோரிடம் தனியாக விசாரணை நடத்தினர். இதையடுத்து, விசாரணை அறிக்கையை மருத்துவர்கள் குழு, அரசிடம் சமர்ப்பித்தது.

இந்நிலையில், குழந்தையின் தாய் அஜிஸா நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "மருத்துவக் குழுவின் விசாரணை அறிக்கை எங்களுக்கு கையில் கிடைத்துவிட்டது. ஆனால், இந்த மருத்துவ அறிக்கையில் எங்களுக்கு துளிகூட திருப்தியே கிடையாது. ஏனென்றால், நாங்கள் கூறியது வேறு. நாங்கள் எழுதிக் கொடுத்த



புகார் என்பது வேறு. ஆனால், மருத்துவக் குழு அறிக்கையில் வந்துள்ளது அதற்கு எதிர்மாறாகத்தான் வந்துள்ளது.

இந்த மருத்துவக் குழு அறிக்கையில் எதுவுமே சரியாக வரவில்லை. இதனால், இந்த அறிக்கையில் எங்களுக்கு எந்தவிதமான திருப்தியுமே இல்லை. இந்த அறிக்கையின் முதல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது போல, 3 பேர் கொண்ட விசாரணைக் குழு வைத்து எங்களை விசாரித்தனர். அது உண்மை நான் ஒப்புக்கொள்கிறேன்.

இந்த விவகாரத்தில் யார் யாரெல்லாம் தொடர்புடையவர்களாக இருக்கிறார்களோ, அவர்களிடம் எல்லாம் நாங்கள் விசாரிப்பதாக கூறியிருந்தனர். ஆனால், அந்த வார்டில் இருந்த மருத்துவர்கள் அனைவரையும் விசாரித்துள்ளனரே தவிர, என்னுடன் அந்த வார்டில் தங்கியிருந்த யாரிடமும் விசாரணை நடத்தவேயில்லை. காரணம், அங்கிருந்தவர்கள்தான் அனைத்துக்குமே சாட்சியானவர்கள். அவர்களை விசாரிக்காமல் விட்டுவிட்டனர்.

அதுபோல், என் குழந்தையை குறிப்பிட்டு தீவிர எடைக்குறைவு என்று கூறியுள்ளனர். பிறந்தது முதல் எடை குறைந்துகொண்டே வந்திருந்தால், அதை தீவிர எடைக்குறைவு என்று கூறலாம். ஆனால், என் குழந்தை பிறந்ததில் இருந்து எடை கூடிக்கொண்டுதானே வருகிறான். எனவே அது எப்படி தீவிர எடைக்குறைவாகும்.

மேலும், நான் என்றைக்கு மருத்துவர் செவிலியரால்தான் என் குழந்தையின் வலதுகை போய்விட்டது என்று இந்தப் பிரச்சினையை ஆரம்பித்தேனோ, அன்று முதல் என் குழந்தைக்கு இருதயக் கோளாறு இருப்பதாக கூறிவருகின்றனர். ஆனால், இப்போது வரை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள என் குழந்தைக்கு எக்கோ உள்ளிட்ட சோதனைகளை செய்த மருத்துவர்கள் பாஸிட்டிவ் ரிசல்ட் கொடுத்துவிட்டனர். பையன் நல்லபடியாக இருக்கிறான். இருதயத்துக்கு எந்த கோளாறும் இல்லை என்று கூறியுள்ளனர்.

அப்படியென்றால், இந்த மருத்துவக் குழு அறிக்கையில் வந்துள்ள முடிவுகள் பொய்தானே? அப்படியென்றால் இதற்கு என்ன அர்த்தம்? இதைவிட அப்பட்டமான பொய், 29-ம் தேதியே குழந்தையின் கை சிவப்பாக மாறியாதாக தெரிந்துகொண்டோம் கூறியிருப்பது. காரணம், நேற்று வரை செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியம் உள்ளிட்ட மருத்துவர்கள், சனிக்கிழமையன்றுதான், குழந்தையின் கை அழுகியதாக சொல்லியிருந்தார்கள். அப்படியென்றால், எதற்காக பொய் சொல்ல வேண்டும்" என்று அவர் கூறினார்.

# ரயில் பெட்டியின் ஜன்னல் கண்ணாடியை உடைத்த கல்லூரி மாணவர்களை தேடி வரும் ரயில்வே போலீசார்

சென்னை,ஜூலை,6

சென்னை சென்ட்ரலில் இருந்து சூலூர்பேட்டை செல்லும் புறநகர் ரயிலில் கத்திவாக்கம் ரயில் நிறுத்தத்தில் பச்சையப்பன் கல்லூரி மற்றும் மாநிலக் கல்லூரி மாணவர்களிடையே கோஷ்டி மோதல் ஏற்பட்டதில் தண்டவாளத்தின் கீழே இருந்த கருங்கற்கள் மற்றும் பாட்டிலை எடுத்து தாக்கியதில் ரயில்பெட்டியின் 4 ஜன்னல் கண்ணாடிகள் உடைத்தனர்


கல்லூரி மாணவர்கள் மோதலால் ரயிலில் பயணித்த ரயில் பயணிகள் அலறி அடித்து





ஓட்டம் பிடித்தனர். இதனையடுத்து கல்லூரி மாணவர்கள் கத்திவாக்கம் ரயில் நிலையத்தில் இறங்கி தப்பி சென்றனர்.

இச்சம்பவம் குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கொருக்குப்பேட்டை ரயில்வே போலீசார் சம்பவத்தில் ஈடுபட்ட கல்லூரி மாணவர்களை தேடி வருகின்றனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்த பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு திட்டத்துக்காக கோவை மாவட்டம் வால்பாறை அரசு பள்ளியில் சமையல் கூடம் கட்டும் பணி நிறைவு பெற்றுள்ளது. இக்கட்டிடத்தை பொள்ளாச்சி சார் ஆட்சியர் பிரியங்கா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, வால்பாறை நகர்மன்ற தலைவர் அழகு சுந்தரவள்ளி மற்றும் நகராட்சி பொறுப்பு கமிஷனர் வெங்கடாசலம் ஆகியோர் உடன் இருந்தனர்.

# அறந்தாங்கி அருகே நாகுடி ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம்

அறந்தாங்கி, ஜூலை.6-

அறந்தாங்கி அருகே நாகுடி ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே நாகுடி கிராமத்தில் அமைந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடத்துவதென அப்பகுதி கிராம மக்களால் முடிவு செய்யப்பட்டது,இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கடந்த 3ஆம் தேதி திங்கள்கிழமை கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது.

அதனை தொடர்ந்து 2 நாட்களாக மூன்று கால யாகபூஜை நடைபெற்று வந்தது, விழாவின் முக்கிய நிகழ்வான நான்காம் கால யாக பூஜை முடிவுற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்ற பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது, கடம் புறப்பாடானது கோவிலை சுற்றி வலம் வந்த பின்னர் கோபுர கலசத்தை அடைந்தது அதனை தொடர்ந்து நாகுடி ஸ்ரீ ராமு தலைமையிலான சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.நாகுடி சுற்று வட்டார கிராம மக்கள், ஆன்மீக மெய்யன்பர்கள் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கோபுர தரிசனம் செய்தனர், அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# திருமங்கலம் அருகே நகராட்சியில் இருந்து வெளியேறும் கழிவு நீர் ஊரணியில் கலப்பு

## கிராம மக்கள் புகார் அளித்தும் அலட்சியம்

மதுரை, ஜூலை.6-

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே சின்ன வடகரையில் உள்ள ஊரணியில் , நகராட்சி பகுதியிலிருந்து வரக்கூடிய கழிவுநீரை அத்து மீறி அங்குள்ள ஊரணியில் கலக்கச் செய்வதால் , ஊரணியில் இருந்து கிராம மக்களுக்கு செல்லக்கூடிய தண்ணீர் துர்நாற்றத்துடனும், நோய் தொற்று பரவும் நிலைக்கு தண்ணீர் கலங்கலாக வருவதால் , அதிர்ச்சி அடைந்த கிராமமக்கள்,போர்க்கால நடவடிக்கையில்



நகராட்சியில் இருந்து வெளியேறும் கழிவு நீரை சின்ன வடகரை ஊரணியில் கலப்பதை தடுத்து, இப்பகுதியில் உள்ள குடியிருப்பு வாசிகளை காக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடகரை கிராம மக்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# கஞ்சா வழக்கு: வாகனங்கள் விசாரணை முடியும் வரை வைத்திருக்க தேவையில்லை

# மருத்துவக் குழு விசாரணை அத்தனைத்தும் பொய் குழந்தையின் தாய்





# அதிமுக ஊழல் வழக்கு: விசாரணையை தொடங்க அனுமதி வேண்டும்


| | | | | |
|---|---|---|---|---|
| சென்னை / புதுக்கோட்டை | 06.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பரிதிமாற் கலைஞர் , தமிழறிஞர் (பி.1870) (இ.1903)



சியாமா பிரசாத் முகர்ஜி , மேற்கு வங்க அரசியல்வாதி (பி.1901) (இ.1953)



ஜார்ஜ் வாக்கர் புஷ் , அமெரிக்காவின் 43வது அரசுத்தலைவர் (பி.1946)



## இன்றைய நினைவு நாள்

தோமஸ் முன்ரோ , சென்னை மாகான ஆளுநர் (பி.1761) (இ.1827)



மயிலை சிவ முத்துக்குமாரசுவாமி , தமிழறிஞர், தமிழாசிரியர் (பி.1892) (இ.1968)



மௌனி , தமிழக எழுத்தாளர் (பி.1907) (இ.1985)



ஜெகசீவன்ராம் , இந்திய அரசியல்வாதி (பி.1908) (இ.1986)

